


# வங்கியொன்றின் அல்லது நிதியியல் நிறுவனமொன்றின் வாடிக்கையாளரா?

அவ்வாறாயின்

வியாபார உறவுமுறைகளை நிறுவுகின்ற பொழுது அல்லது உங்கள் தகவல்களைக் காலாந்தர அடிப்படையில் இற்றைப்படுத்தும் பொழுது உங்கள் வங்கியினால் அல்லது நிதியியல் நிறுவனத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற கீழேயுள்ள தகவல்களைத் தயவுசெய்து வழங்கவும்:

- ☐ முழுப் பெயர்
- ☐ உங்கள் புகைப்படத்தினைத் தாங்கிய அலுவல்சார் தனிப்பட்ட அடையாளம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணங்கள் (உ-ம்: தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமப்பத்திரம்)
- ☐ நிரந்தர முகவரி மற்றும் முகவரியைச் சரிபார்ப்பதற்கான ஆவணங்கள்
- ☐ தொலைபேசி இலக்கம்
- ☐ பிறந்த திகதி மற்றும் தேசியம்
- ☐ புரியும் தொழிலுடன் தொடர்பான விபரங்கள்
- ☐ கணக்கினைத் திறைக்கின்றமையின் நோக்கம்
- ☐ எதிர்பார்க்கப்படும் மாதாந்த மொத்தப் புரள்வு/ வியாபாரத்தின் அளவு
- ☐ எதிர்பார்க்கப்படும் கொடுக்கல்வாங்கல் மாதிரி
- ☐ வருவாய்களின் மூலம்

உங்கள் வங்கிக்கு அல்லது நிதியியல் நிறுவனத்திற்கு நீங்கள் வழங்கிய மேற்குறிப்பிட்ட தகவல்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் போது மேற்குறிப்பிட்ட தகவல்களை இற்றைப்படுத்திக் கொள்வது உங்களின் பொறுப்பாகும்.

வங்கிகள் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் அவர்கள் வழங்குகின்ற பணிகளின் தரத்தினை உயர்த்துவதற்காக உங்களின் தகவல்களைச் சேகரிக்கும் போது நிதியியல் குற்றங்களின் இடர்நேர்வுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் சட்டபூர்வத் தேவைப்பாடுகளைப் பின்பற்றவும்.

உங்கள் வங்கியுடன் அல்லது நிதியியல் நிறுவனத்துடன் ஆதரவளிக்கின்றதொரு விதத்தில் தீவிரமான முறையில் நீங்கள் ஒத்துழைக்கவில்லையாயின் அவர்கள் ஏதேனும் வியாபார உறவுமுறைகளை உங்களுடன் மேற்கொள்ளாமல் விடலாம் அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கல்களை உங்களுடன் மேற்கொள்ளாமல் விடலாம் அல்லது உங்களுடன் இருந்த வியாபார உறவுமுறைகளை முடிவுறுத்தி விடலாம்.

உங்கள் வங்கியினால் அல்லது நிதியியல் நிறுவனத்தினால் கேட்டுக் கொள்ளப்படுகின்ற தகவல்களை வழங்குவதும் சாத்தியமான நிதியியல் குற்றங்களிலிருந்து நன்கு பாதுகாக்கப்பட்ட சுமுகமானதும் வினைத்திறன் மிக்கதுமான நிதியியல் பணிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு ஒத்துழைப்புக்களை நல்குவதும் உங்களின் பொறுப்பாகும்.

எனவே, இது தொடர்பில் தங்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் மனப்பூர்வமாக வேண்டப்படுகிறது.

**கூடுதலான தகவல்களுக்காக, நிதியியல் உறவறிதல் பிரிவினால் விடுக்கப்பட்ட 2016 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட இல.1951/13 கொண்ட அதிவிசேட வஉத்தமானியில் வெளியிடப்பட்ட 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் (வாடிக்கையாளஉ உரிய விழிப்புக் கவன) விதிகளைப்** பார்வையிடுவதற்கு கியூஆர் குறியீட்டினை ஸ்கான் செய்யவும்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

මූල්‍ය බුද්ධි ඒකකය
நிதியியல் உளவறிதல் பிரிவு
FINANCIAL INTELLIGENCE UNIT


பணிப்பாளர், இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி, இல.30., சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

☎ 0112477125 🖷 0112477692 @ fiu@cbsl.lk 🌐 www.fiusrilanka.gov.lk